PRESS RELEASE

# முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்திருத்தம் தொடர்பில் (MMDA) தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கருத்திற்கு பொருளாதார நீதிக்கான பெண்ணிலைவாதக் குழுமத்தின் பதில்

**முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் திருத்தத்தினை மேற்கொள்வதற்கான தேவை எதுவும் இல்லை என தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர் விஜித ஹேரத்தினால் எந்தவித அடிப்படைகளுமற்றவிதத்தில் கூறப்பட்ட முற்றுமுழுதான தவறான கருத்தினை எமது குழுமம் கண்டனம் செய்கின்றது.** எமது குழுமமானது இக்கருத்தினை வன்மையாகக் கண்டிப்பதுடன், எமது குழுமத்திற்குள்ளும் அதற்கு வெளியிலும் இருந்து முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் காரணமாக பல தசாப்தங்களாக பெண்கள் எதிர்கொள்ளும் பாரபட்சத்தினையும் பல்வேறுபட்ட வன்முறைகளையும் சுட்டிக்காட்டிவரும் முஸ்லிம் பெண் செயற்பாட்டாளர்களுடனும் நாம் உடன் நிற்கின்றோம். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் கூறப்பட்டுள்ள இந்த கூற்று மற்றும் இவர்களுக்கு முன்பிருந்த அரசாங்கங்களினாலும் அரசியல் கட்சிகளினாலும் மேற்கொள்ளப்பட்ட இதுபோன்ற அறிக்கைகளானவை முஸ்லிம் பெண்கள் மற்றும் சிறுமியரது வாழ்க்கை அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்படும் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்திருத்தத்திற்கான நியாயமான கோரிக்கையினை அலட்சியப்படுத்துகின்றது. முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் திருத்தத்தினை ஏற்படுத்துவதற்கான போராட்டமானது நீண்டகாலமாக இடம்பெற்றுவருவது மட்டுமல்லாது இதில் ஈடுபட்டுவரும் செயற்பாட்டாளர்கள் மிரட்டப்பட்டும், இழிவுபடுத்தப்பட்டும், அச்சுறுத்தப்பட்டும் வருகின்றனர். இந்நிலைமையிலேயே இப்போராட்டம் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றது. தேசிய மக்கள் சக்தியின் முற்போக்கான பெண்களின் ஒன்றியமானது முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் திருத்தத்தினை ஏற்படுத்துவதற்கான கோரிக்கைக்கு ஒப்புதலளித்திருப்பதுடன், 'வளமான நாடு அழகான வாழ்க்கை (2024)' எனும் தேசிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடனமும் பாரபட்சமான சட்டங்களைத் திருத்துவதற்கு உறுதிபூண்டிருக்கும் நிலையில் அமைச்சரின் இத்தகைய அறிக்கையானது கோபமூட்டுவதாக அமைந்துள்ளது.

**குடும்பச் சட்டத்தில் திருத்தத்தினை ஏற்படுத்துவதானது, குடும்பக் கட்டமைப்பிற்குள் நிலவும் அநீதிகளுக்கெதிராக சமூகநீதிக்காகப் போராடுவதற்கான வெளியினை உருவாக்கும்.** இது பெண்களுக்கான பொருளாதார உரிமை, நீதி, மற்றும் பாதுகாப்பிற்கு அடிப்படையானதாகவும், அவற்றுடன் நேரடியாகத் தொடர்புபட்டதாகவும் இருக்கின்றது. குறிப்பாக குடும்பப் பொருளாதாரத்தில் பெண்களின் முடிவெடுக்கும் திறன்; பிறந்தவீடு மற்றும் திருமணமாகிய குடும்பங்களிலிருந்து நீதியானமுறையில் பொருளாதார வளங்களையும் சொத்துக்களையும் அணுகுதல்; பெண்களால் மேற்கொள்ளப்படும் ஊதியம் வழங்கப்படாத பராமரிப்புப் பணிகளை மதித்தல்; வறுமை மற்றும் வேறுபல அழுத்தமான சூழற்பின்னணியில் பிள்ளைகள் பராமரிப்பு மற்றும் பெண்களின் பிள்ளைப்பேறுசார் முடிவுகளில் சுதந்திரம் மற்றும் செயலாளுமை போன்றன முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் போன்ற சட்டங்களினால் ஆளுகைசெய்யப்படுகின்ற குடும்பக் கட்டமைப்புக்களில் தங்கியிருக்கின்றன. முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் போன்ற சட்டங்களால் வலுப்படுத்தப்படுகின்ற ஆணாதிக்க சமூகக் கட்டமைப்புக்களை அடிப்படையாகக்கொண்டு திணிக்கப்படும் பொருளாதாரரீதியாகத் தங்கிவாழும்நிலையில் பெண்கள் வாழ்கின்றபோதும், இலங்கை அரசாங்கத்தினாலும், சர்வதேச நாணயநிதியத்தினாலும் திணிக்கப்படும் சிக்கனப்படுத்தல் நடவடிக்கைகளையும், கடன் சுமையினையும் பெண்களே சுமக்கின்றனர். இச்சுமையானது பாரபட்சமான குடும்பச் சட்டங்களால் மேலும் தீவிரப்படுத்தப்படுகின்றது, பொருளாதார மீட்பு மற்றும் சிக்கனப்படுத்தல் நடவடிக்கைகள் எனும்பெயரில் இலங்கை அரசாங்கமும் சர்வதேச நாணயநிதியமும் இத்தகைய சட்டங்களில் வேண்டுமென்றே தங்கியிருக்கின்றன. இது தேசிய கடனிலிருந்து மீள்வது என்னும் பெயரில் இலங்கையிலுள்ள பெண்கள் மற்றும் சிறுமியரின் நலன்களைத் பலியாக்குவதே ஆகும்.

**பெண்களுக்கான பொருளாதார நீதியே நாட்டின் பொருளாதார ஸ்திரத்திரத்தன்மைக்கான அடிப்படையாக அமைகின்றது என்பதனை பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்பட்டு அலுவலகங்களில் அமரவிருக்கும் அனைத்து வேட்பாளர்களுக்கும் எமது குழுமம் நினைவுபடுத்த விரும்புகின்றது.** தமது பிரச்சாரத்தின்போது மேற்கொள்ளும் வாக்குறுதிகளை அப்பட்டமானமுறையில் மீறும் நிலையில் அது மக்களுக்கும் அரசாங்கத்திற்குமிடையிலான நம்பிக்கையினை முறியடிக்கின்றது. இத்தகைய அரசியல் நடைமுறைகளே அரசியல்ரீதியான ஸ்திரமற்றதன்மையினை ஏற்படுத்துவதனூடாக மீண்டும் மீண்டும் பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச்செல்கின்றது. **அனைத்துவிதமான சமய நம்பிக்கைகளைக் கொண்ட இலங்கைப் பெண்களும் கட்டமைப்பு ரீதியான மாற்றத்திற்கான தமது கோரிக்கையினைத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். அக்கோரிக்கையானது சமத்துவம் மற்றும் பாரபட்சப்படுத்தாமை என்பதாகும். அக்கோரிக்கையானது முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தினை இப்போதே திருத்தம் செய்யவேண்டும் என்பதாகும்!**

நவம்பர் 10, 2024

பொருளாதார நீதிக்கான பெண்ணிலைவாதக் குழுமம் என்பது பெண்ணிலைவாத பொருளியலாளர்கள், அறிஞர்கள், செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என நாடு முழுவதுமிருந்து இலங்கையின் தற்போதைய பொருளதார நெருக்கடியுடன் அவர்கள் பணியாற்றும் சமுதாயங்களின் வாழ்க்கை யதார்த்தங்களை அடிப்படையாகக் கொண்ட கொள்கைப் பரிந்துரைகளைப் புரிந்துகொள்வதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் அவற்றுக்குக் குரல் கொடுப்பதற்கும் *2022* ஏப்ரலில் ஒன்று சேர்ந்த ஒரு கூட்டாகும். உங்கள் கருத்துக்களைத் தயவுசெய்து பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்
*feministcollectiveforjustice@gmail.com*